# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

# வெற்றிடங்கள்

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகமை பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன (TRCSL)**

## ஆணைக்குழுவின் செயலாளர்

**பதவி பற்றிய விபரம்**

01. ஆணைக்குழுவின் கூட்டங்களை நடாத்துதல்
02. கூட்ட அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களைப் பேணுதல்.
03. ஆணைக்குழுவின் தீர்மானங்களை அறிவித்தல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
04. வருடாந்த அறிக்கைகளைத் தயார் செய்தல்.
05. பொதுமக்கள் விசாரணைச் செயற்பாடுகளுக்கு சமூகமளித்தல்.

**தேவையான கல்வி / தொழில்சார் தகைமைகள்:**

சட்டத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்ற 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பு விசேட இழமானிப் பட்டம்

அல்லது

சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

தேவையான அனுபவங்கள் :

சட்டத்துறையில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் குறைந்தது மூன்று வருட அனுபவம்

அல்லது

நாடளாவிய சேவையில் ஒரு உத்தியோகத்தராக ஆகக் குறைந்தது திருப்திகரமான 03 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**தேவையான ஏனைய அனுபவங்கள் :**

ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, தரவுத்தள முகாமை மற்றும் நியம மென்பொருள் பொதிகளில் சிறந்த அறிவு

மற்றும்

ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, ஆங்கிலம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழிகளில் (எழுத்து மற்றும் பேச்சு) சிறந்த தொடர்பாடல் திறன்கள்.

வயது : 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் : தொ.ஒ.ஆ. – 2 -2 சம்பள அளவுத்திட்டம் ஏற்புடையதாகும்.**

ஆட்ச்சேர்ப்பு நடபடிமுறை – போட்டிப் பரீட்சையொன்றைத் தொடர்ந்து கட்டமைப்பானதொரு நேர்முகப் பரீட்சை மூலம்.

எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் – பொது விவேகம், விடய அறிவு, முகாமைத்துவ திறன்கள்

**விண்ணிப்பிக்கும் முறை**

- இங்கே விண்ணப்பப் படிவம் பதவிறக்கம் செய்யப்படுதல் வேண்டும். here.
- உரிய மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்கள் கல்வி / தொழிற்றகைமைகளின் பிரதிகளோடு சேவை அனுபவ விபரத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும்.
- விண்ணப் படிவங்கள் தெளிவாகவும் வாசிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும் அத்தோடு விண்ணப்பப் படிவத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பப் படிவங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.
- தகமைகள், அனுபவங்கள் மற்றும் ஏனைய விபரங்களை வழங்கி முறையாக பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகள் careers@trc.gov.lk என்ற முகவரிக்கு 2022.03.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒரே ஆவணமாக பிடீஎப் மாதிரி அமைப்பில் ஒரு தனி ஆவணமாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தற்பொழுது வகிக்கும் பதவிகளிலிருந்து தம்மை விடுவிப்புச் செய்வதற்கான திணைக்கள / நிறுவன தலைவர்களின் விருப்பத்துடன் அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அதிகாரசபைகளின் ஊடாக மேற்படி பதவிக்கான தங்களுடைய விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல் வேண்டும்.
- சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமர்ப்பிக்காத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப் படும். இந்த ஆவணங்களின் மூலப் பிரதிகள் நேர் முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

1. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் அத்தோடு விண்ணப்பதாரிகள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும் அத்தோடு நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கு உடன்படுதலும் வேண்டும்.
2. விண்ணப்ப முடிவுத் திகதியின் போது தேவையான தகமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டார்கள்.
3. எந்தவிதமான செல்வாக்குகளையும் பிரயோகித்தல் தகைமையீனமொன்றாக கருதப்படும்.
4. ஆட்சேரப்பினை பின்போடுவதற்கு / இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கும் உரிமையை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கொண்டுள்ளது.
5. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஒழுங்குறுத்துகை அதிகாரசபையாக இருப்பதுடன், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் வேலைவாய்ப்பொன்றை பெற்றிருக்கின்ற எவரேனும் ஒருவர் அவர் / அவள் தனது துணைக்கு அல்லது குடும்பத்தின் ஏதேனும் அங்கத்தவருக்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நிறுவனமொன்றின் பதவியொன்றுக்கு அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பதவியொன்றுக்கு நியமனம் செய்யுமாறு அல்லது தொழில்வாய்ப்பொன்றை பெற்றுக் கொள்வதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேம்பாடு, முன்வருதல் அல்லது பரிந்துரைத்தல் செய்தலாகாது.
6. அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பப் படிவங்களை தங்களுடைய நிறுவன தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டுவதுடன் அவர்கள் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் விடுவிப்புச் செய்வதற்கான சாத்தியப்பாட்டையும் குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டிக் கொள்கின்றோம்.